சாட்சிய வாக்குமூலம்

(கு.வி.மு.ச.அத்தியாயம் 23)

முதல் கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றம், ஈரோடு மாவட்டம்

அமர்வு வழக்கு எண்.102/2017

2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 08-ம் தேதி நாள் அரசு தரப்பு சாட்சியாக அ.த.சா.-1வது சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1968ம் ஆண்டு 54 வது சட்டத்தில் உள்ள 5(2) பிரிவின்படி ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது. எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வாசுதேவன் | மாவட்டம் | : | |
| த/பெ.பெயர் | : | வேலப்பமுதலியார் | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| வட்டம் | : | | | | |

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் ஈரோடு நகரம் வீரப்ப சத்திரம் சத்தி ரோடு கதவு எண்.282ல் குடியிருந்து வந்தேன். தற்சமயம் ஈரோடு நகரம் இடையன்காட்டுவலசில் தற்போது வசித்து வருகிறேன். நான் தற்போது மாவட்ட மூத்த அரசு வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறேன். எனது மனைவி பெயர் மல்லிகா. எனக்கு 2 குழந்தைகள். அதில் மூத்த மகள் பெயர் கோமதி அவர் தற்சமயம் திண்டுக்கல்லில் பல் மருத்துவராக பணிபுரிந்து வருகிறார். 2வது குழந்தை ஆனார் என் மகன் ஆவார். அவர் பல் மருத்துவராக சென்னையில் பணிபுரிந்து வந்தார்.

2. எனக்கு ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். 1ம் எதிரியின் மனைவி தான் 2ம் எதிரி, 3ம் எதிரி 1,2 எதிரிகளின் இளைய மகள் ஆவார். எதிரிகள் முதலில் கேரளா மாநிலம் கள்ளிக்கோடு என்ற இடத்தில் பிரிண்டிங்பிரஸ் தொழில் செய்து வாழ்ந்துவந்தார்கள். 2வது எதிரி எனது மருமகனின் உடன் பிறந்த சகோதரி ஆவார். என் மகளுக்கு 2004ம் ஆண்டு திருமணம் ஆன பின்பு 3வது எதிரியும் என் மகன் அருண்ராமும் உறவினர்கள் என்ற முறையில் பழகி காதலித்து வந்தனர்.

3. மேற்படி சங்கதி 2012ம் ஆண்டு என் மகன், என் மனைவியிடம் கூறி எனக்கு தெரிய வந்தது. நான் என் மகனிடம் இதை பற்றி விசாரித்த போது

என் மகனும், 3ம் எதிரியும் உயிருக்கு உயிராக நேசித்து வருவதாகவும் இருவரும் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று இறுதி முடிவு எடுத்து இருந்ததாகவும் கூறினார்.

4. அதனால் நான் எனது மகனின் விருப்பத்திற்கிணங்க எனது மனைவியை சமாதான படுத்தி 2013ம் ஆண்டு அக்டோபர் மாதம் எனது மகளின் திண்டுக்கல் வீட்டில் இருந்து காரில் கிளம்பி கள்ளிக்கோடு செல்வதற்காக புறப்பட்டோம். நாங்கள் திண்டுக்கல்லில் இருந்து புறப்பட்டபோது காலை 10.30 மணிக்கு எதிரிகள் 1 மற்றும் 2 இருவருக்கும் அலைபேசி மூலமாக தகவல் தெரிவித்தோம். அப்பொழுது மேற்கண்ட எதிரிகள் என்ன காரணத்திற்காக வருகிறீர்கள் என்று கேட்டார்கள் அதற்கு நான் நல்ல விசயமான திருமணம் பற்றி பேச வருகிறோம் என்று கூறினேன்.

5. மேலும் எதிரிகள் சம்மதத்தின் பெயரில் நானும்,என் மனைவியும் மாலை 6 மணி அளவில் எதிரிகளின் வீட்டிற்கு சென்றோம். அங்கு சென்று பார்த்தபோது எதிரிகளின் வீடு வெளியில் பூட்டபட்டு இருந்தது. நான் 1வது மற்றும் 2வது எதிரிகளை என்னுடைய அலைபேசி மூலம் அவர்கள் வீட்டில் இருந்து பலமுறை அழைத்தேன் ஆனால் அவர்கள் எனது அழைப்பை ஏற்கவில்லை. அதன் பின் இருட்டி விட்டதால் நானும் என் மனைவியும் அங்கு இருந்து திரும்பிவிட்டோம்.

6. எதிரிகளின் மேற்கண்ட செயல் எனக்கு மிகவும் அவமானமாகவும், அசிங்கம் பட்டதுபோல் எனக்கு மனநிலையை ஏற்படுத்தியது. அதன் பின்னர் நானும் என் மனைவியும் விடியற்காலை 3மணி அளவில் அதாவது 14.10.2013 அன்று எங்கள் மகளின் வீட்டிற்கு திரும்பி விட்டோம். நான் எதிரிகள் வீட்டிற்கு தகவல் கொடுத்து சென்று அவர்கள் வீட்டை பூட்டிவிட்டு என்னை மிகவும் கேவலப்படுத்தி உள்ளார்கள் அதனால் எனது மனம் வேதனையாக உள்ளது. இந்த வீட்டில் என்பது எதிரிகளின் வீட்டில் திருமணம் செய்வது பற்றி எனது மகன் அருண்ராமிடம் கூறி நல்ல முடிவெடுக்க சொல்லி அறிவுறுத்தினோம். அதன் பின்னர் என் மகன் மிகவும் வேதனையுடன் காணப்பட்டார்.

7. இந்நிலையில் 2014ம் ஆண்டு ஜூன் மாதம் 15ம் தேதி நானும், என் மனைவியும் எங்களுடைய மகனை சென்னையில் இருந்து ஈரோட்டிற்கு வரசொல்லி கூறினோம். நான் அவ்வாறு கூறியதற்கு காரணம் என் மகன் மிகவும் மன வேதனையுடன் மருத்துவமனை நடத்த முடியாமல் கஷ்டபடுவதாக அவருடைய நண்பர்கள் என்னிடம் தெரிவித்தார்கள். இந்நிலையில் 1,2 எதிரிகள் தங்களுடைய 3வது எதிரியான மகளுக்கு சென்னிமலையை சார்ந்தவரும் பெங்களூரில் ஒரு வங்கியில் பணி புரியும்

நபரான பரத் (எ) நாகராஜ்க்கு தனது மகளை திருமணம் செய்து கொடுக்க ஏற்பாடுகள் செய்து 18.06.2014ம் ஆண்டு சென்னிமலையில் உள்ள செங்குந்தர் திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற உள்ளதாக நாங்கள் அறிந்தோம் ஆனால் நான் இந்த விசயத்தை என் மகனிடம் கூறினால் மேலும் அவர் கவலை அடைவார் என்பதால் அவரிடம் கூறவில்லை.

8. நாங்கள் கள்ளிக்கோட்டை சென்று திரும்பிய பின்னரும் 3வது எதிரி தொடர்ந்து என் மகனிடம் அலைபேசியிலும் மற்றும் மடிக்கணியிலும் தொடர்பு கொண்டு என் மகனிடம் ஆசை வார்த்தைகள் பேசி காதலை வளர்த்து வந்தார். அதன் பின்னர் இருவரும் நேரில் சந்தித்து பழகி வந்தார்கள். அதன் காரணமாக என் மகன் மேற்படி 3ம் எதிரியை மிகவும்நேசித்து வந்தார். 3ம் எதிரியும் என் மகனை அதை போல் மிகவும் நேசித்து வந்தார். இந்நிலையில் 3ம் எதிரிக்கு வேறு ஒரு நபருடன் திருமணம் நடக்க போவது என்பதை என் மகன் எப்படியோ அறிந்து கொண்டு 17.06.2014ம் ஆண்டு மதியம் என் மகன் வெளியே சாப்பிட்டு விட்டேன் எனவே என் மகன் தூங்க செல்வதாக மதியம் 2.30 மணி அளவில் என் மனைவியிடம் கூறிவிட்டு எனது வீட்டின் மேல் மாடியில் உள்ள அவருடைய அறைக்கு சென்று விட்டார்.

9. நான் மேற்கண்ட தேதியில் மாலை 3 மணி அளவில் எனது வழக்கறிஞர் பணிகளை முடித்துகொண்டு வீட்டிற்கு சென்றேன். நான் எனது வீட்டில் எனது மனைவியை பார்த்து என் மகன் அருண் சாப்பிட்டு விட்டாரா என்று கேட்டேன். அதற்கு என் மனைவி என் மகன் சாப்பிட்டு விட்டதாக கூறி மேல் மாடியில் உள்ள அவரது அறைக்கு தூங்க செல்வதாகவும் என் மகனை எழுப்பி தொந்தரவு செய்ய வேண்டாம் என்று என் மனைவியுடம் என் மகன் கூறியுள்ளார்.

10. அதன் பின்னர் நான் வீட்டில் தான் இருந்தேன். இரவு 9.30 மணி அளவில் கூட என் மகன் சாப்பிட வரவில்லை. பின்னர் 2,3 முறை மேல் மாடியில் உள்ள என் மகனின் அறையின் கதவை இரவு 11 மணி வரைதட்டி பார்த்த போது என் மகன் கதவை திறக்கவில்லை. பின்னர் என் மகனின் அறைக்கு பின் புறம் உள்ள பால்கணியில் சென்று பார்த்த போது அங்கு ஒரு ஜன்னல் திறந்து இருந்தது அந்த ஜன்னல் வழியாக பார்த்த போது என் மகன் அவருடைய அறையில் உள்ள மேல் சிமெண்ட் சிலிங்கில் பொருத்தப்பட்டு இருந்த மின் விசிறியில் ஒரு பாலிஸ்டர் வேஸ்டியை கட்டி அதில் என் மகன் தூக்கு மாட்டி தொங்கி இருந்த நிலையில் நான் பார்த்தேன். பின் மாடிபடி அருகே நின்று என் மனைவியை அழைத்தேன். அவரிடம் மேற்கண்ட சம்பவத்தை கூறிய

போது நானும் என் மனைவியும் எல்லையில்லா துன்பத்தை அடைந்தோம். என்னால் என் மகனின் அறை கதவை மேற்கொண்டு திறக்க இயலவில்லை. எனவே நான் என் உடன் பிறந்த சகோதரர் சண்முகசுந்தரம் என்பவருக்கு அழைபேசியில் இரவு 11.15 மணி அளவில் தொடர்பு கொண்டு மேற்படி சம்பவத்தை கூறினேன்.

11. உடனே எனது சகோதரர் சண்முகசுந்தரமும், அவருடைய மகன் சிவராமனும் அவர்கள் வீட்டில் இருந்து புறப்பட்டு எனது வீட்டிற்கு வரும் போது எனது சகோதரியின் கணவர் சிங்காரவேல் எனது வீட்டிற்கு 2 கட்டிடம் தள்ளி தன்னுடைய அச்சகத்தில் இரவு வேலை செய்து கொண்டு இருந்தார். அவரையும் அழைத்து கொண்டு மூவரும் என் வீட்டிற்கு வந்தார்கள். நானும், என் மனைவியும் அழுது கொண்டே நான் பார்த்த விசயத்தை கூறியபோது எனது தம்பியின் மகன் கதவை தன்னுடைய காலால் எட்டி உதைத்தார் உடனே என் மகனின் அறையின் இரட்டை கதவுகள் திறந்துகொண்டன. உள்ளே சென்ற மூவருமான என் தம்பி சண்முகசுந்தரம், அவருடைய மகன் சிவராமன் மற்றும் என் மைத்துனர் சிங்காரவேல் ஆகியோர் எனது மகனின் உடலை மின் விசிறியில் தொங்கி கொண்டு இருந்ததை அப்போது சிவராம் கத்தி எடுத்து வந்து மின் விசிறியில் உள்ள சிவப்பு கரை கொண்ட பாலிஸ்டர் வேஷ்டியை அறுத்தார் அப்போது அங்கு இருந்த என் தம்பி சண்முகசுந்தரமும் மற்றும் என் மைத்துனர் சிங்காரவேல் இருவரும் என் மகனின் உடலை தூக்கி பிடித்து கொண்டார்கள் அப்போது சிவராம் என் மனைவி கொண்டு வந்து கொடுத்த கத்தியால் மேற்படி வேஷ்டியை இரண்டாக அறுத்து உடம்பை மின் விசிறியில் இருந்து இறக்கி படுக்க வைத்தார்கள்.

12. அதன் பின்னர் ஆம்புலன்ஸ் வானகத்தை வர வைத்து இரவு 11.55 மணி அளவில் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு உயிர் இருக்கும் என்று நம்பிக்கை அடிப்படையில் கொண்டு சென்றார்கள். ஆனால் அங்கு மருத்துவமனையில் பணியில் இருந்த மருத்துவர் என் மகன் ஏற்கனவே இறந்து விட்டதாக உறுதி செய்தார். என் மகனின் பிரேதத்தை சவகிடங்கிற்க்கு அனுப்பி வைத்தார். நான் அதன் பின்னர் அங்கு இருந்த என் மனைவி மற்றும் சில உறவினர்கனை அழைத்து வீட்டிற்கு திரும்பி விட்டேன். அதன் பின்னர் சுமார் விடிற்காலை 2மணி அளவில் அதாவது 18.06.2014 அன்று ஈரோடு வடக்கு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். மேலும் நான் புகார் கொடுக்கும் போது என் மகனின் இறப்பு காரணமாக எனக்கு எழுத வரவில்லை எனவே மேற்கண்ட காவல் நிலையத்தில் இருந்த காவல் உதவி ஆய்வாளர் துளசிமணியுடன் இருந்த காவலரிடம் மேற்கண்ட சம்பவத்தை நான் சொல்ல சொல்ல அந்த காவலர்

புகாரை வெள்ளை தாளில் எழுதினார். நான் அந்த புகாரை அவர் எழுதிய பிறகு படித்து பார்த்தேன். அதில் நான் கூறியவாறு இருந்தது. மேலும் அந்த புகாரில் கையொமிட்டேன். தற்போது என்னிடம் காட்டப்பட்ட புகார் தான் நான் கொடுத்தது அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் அ.த.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13. தற்போது என்னிடம் காட்டப்படும் மேற்கண்ட மின்விசிறியில் தூக்கிற்காக பயன் படுத்தப்பட்ட வேஷ்டி அது அ.சா.பொ.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது மேலும் என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை நான் கொடுத்த புகாரின் பெயரில் பதிவு செய்யப்பட்டது. மேலும் முதல் தகவல் அறிக்கையில் என்னுடைய கையொப்பம் உள்ளது. அதன் பின்னர் மேற்கண்ட அன்றைய தினமான காலை 5.30 மணி அளவில் ஈரோடு வடக்கு காவல் நிலைய காவல் ஆய்வாளர் மற்றும் இரண்டு காவலர்களும் என் மகன் பயன்படுத்தி இருந்து அவர் இறந்த அறைக்கு சென்று பார்வையிட்டு சென்றார்கள். அதன் பின்னர் காலை 7 மணி அளவில் நானும் எனது மனைவி ,எனது சகோதரர், சகோதரர் மகன் சிவராமன், என் மைத்துனர் சிங்காரவேல் ஆகியோரை சவகிடங்கில் இருந்த எனது மகனின் பிரேதத்தை அருகில்வைத்து அடையாளம் காண்பித்து போலீஸ்சார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். மேற்படி வாக்கு மூலத்தை நானும், எனது மனைவி மல்லிகா, எனது சகோதரர் சண்முகசுந்தரம், அவருடைய மகன் சிவராமன், என் மைத்துனர் சிங்காரவேல் ஆகியோர் வாக்குமூலம் போலீஸ்சாரிடம் கொடுத்தார்கள். அதன் பின்னர் நானும், என் மனைவியும் மிகவும் மன வேதனையுடன் என் மகனின் மாடியில் உள்ள அறைக்கு 10 நாட்களாக செல்லவில்லை.

14. மேற்படி அறை பூட்டாமல் தாழீட்டு இருந்தது. நானும் என் மனைவியும் 28.06.2014ம் தேதி அன்று என் மகனின் அறையை சுத்தம் செய்வதற்காக சென்றோம். அப்போது என் மகனின் படுக்கை ஒட்டி இருந்த திறந்த நிலையில் இருந்த கபோடில் நிறைய மருத்துவ புத்தங்கள் அடிக்கி வைக்கப்பட்டு இருந்தது. அதில் அந்த கபோடில் கீழ் வரிசையில் இருந்த ஒரு புத்தகத்தில் வெள்ளை பேப்பர் கொத்தாக வெளியில் தெரியுமாறு இருந்தது. மேற்படி அந்த தாள்களை எடுத்து படிக்கும் போது என் மகன் இறப்பதற்கு முன்பு எழுதி வைத்த தற்கொலைக்கு காரணம் குறித்த கடிதம் இருந்தது.

15. தற்போது என்னிடம் காட்டப்படும் மேற்கண்ட கொத்தாக கொண்ட 10 பக்கங்கள் ஆகும். மேற்கண்ட தாள்களில் எனது மகன் பெரும் பகுதி ஆங்கிலத்திலும், ஒரு சில பகுதிகள் தமிழிலும் கலந்து எழுதி வைத்து இருந்தார். மேலும் அந்த பக்கங்களிலும் என் மகன்

கையொப்பமிட்டுயிருந்தார். என் மகன் எழுதிய கடையசியாக இந்த கடிதத்தை நான் தனியாக ஒரு கடிதம் எழுதி அதனோடு சேர்த்து 28.06.2014 அன்று ஈரோடு வடக்கு காவல் ஆய்வாரிடம் கொடுத்தேன்.

16. மேற்படி என் மகன் எழுதிய தற்கொலை கடிதம் அ.சா.பொஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் காவல் ஆய்வாளரிடம் தற்கொலை கடிதத்துடன் என் கைப்பட எழுதிக் கொடுத்த கடிதம் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி படிவம் 91ல் நான் கையொப்பமிட்டேன். 28.06.2014 அன்று மேற்கண்ட சங்திகளை பொறுத்து காவல் ஆய்வாளர் வாக்குமூலம் பதிவு செய்தார். மேலும் என் மகனின் தற்கொலை கடிதத்தில் எனது சகோதரர் மற்றும் என் மனைவியின் சகோதரியின் மகன் மருத்துவர் சதாசிவம் அவருடைய மனைவி நிர்மலா ஆகியோரிடம் ஆஜர் எதிரிகள் மூவரும் தனித்தனியாக அழைபேசியில் அழைத்து என் மகனை கேவலமாக பேசியதாகவும் மற்றும் எதிரிகளுக்கு சம்மந்தப்பட்ட உறவினர்களிடன் அதே போல் என் மகனின் பெயரையும் அவருடைய மதிப்பு, மரியாதை ஆகியவை கெடும் படியாக தரக்குறைவாக பேசியதால் தனக்கு உறவினர்கள் மத்தியிலும் மற்றும் சமுதாயத்திலும் மரியாதை குறைந்து விட்டது என்பதனாலும் மூன்றாம் எதிரி தன்னை 8 வருடங்களாக காதலிப்பதாக தொடர்ந்து தொடர்பு கொண்டு பேசி ஏமாற்றி விட்டு வேறு ஒருவரை திருமணம் செய்து கொள்ள முடிவு செய்து உள்ளது என்பது தனக்கு மிகுந்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியது. அதனால் நானும், என் மனைவியும் எனது உறவினர்கள் மருத்துவர் சதாசிவமும் அவருடைய மனைவி நிர்மலா ஆகியோரிடம் கேட்டபோது முதல் எதிரி மேற்கண்ட சதாசிவத்திடமும், அவரது மனைவியுடமும் என் மகன் அருணை மரியாதையாக இருக்க சொல்லுங்கள் ஈரோட்டில் ஆஜர் எதிரிகளுக்கும் ஆட்கள் உள்ளனர். எனவே மேற்கொண்டு இது போல் நடந்தால் அருண்ராமை மறந்துவிட வேண்டியது தான் என்று சதாசிவம் என்னிடம் கூறினார்.

17. அதை போல் இரண்டாவது எதிரியும் மருத்துவர் சதாசிவமும் மற்றும் அவரது மனைவியிடம் அழைபேசியில் அழைத்து அருண்ராமை எச்சரிக்கை செய்யுங்கள் என்று கூறினார். சதாசிவத்திற்கு மகளுக்கு இப்படி ஏற்பட்டு இருந்தால் என்னை செய்விர்கள் என்று சொன்னார்கள். 3வது எதிரியும் அருண்ராமை என்னிடம் அழைபேசியில் பேச சொல்லாதீர்கள் என்று கூறியதாக என்னிடம் கூறினார். இது சம்மந்தமாக சதாசிவம் என் மகனை அழைத்து கேட்ட போது என் மகன் அண்ணா (சதாசிவம்) நான் பேசவில்லை 3வது எதிரி தான் தொடர்ந்து அழைபேசியில் பேசி எனக்கு தொல்லை கொடுத்து வருகிறார்.

18. மேலும் எனது மகனின் அழைபேசியில் உள்ள Incoming calls காட்டி அழுது புலம்பினார் என்று என்னிடம் கூறினார். 30.06.2014அன்று காவல் ஆய்வாளர் வாக்கு மூலம் பதிவு செய்தார். 26.08.2014 அன்று காவல் ஆய்வளார் என்னை அழைத்து என் மகன் எஸ்.ஆர்.எம். மருத்துவ கல்லூரி சென்னையில் பயன்படுத்திய நோட்டுகளில் உள்ள கையெழுத்தை கொடுக்குமாறு கூறினார். 15.07.2014 அன்று ஒரு எஸ்.பி.எம். என்ற பெயரில் உள்ள நோட்டு மற்றும் ஒரு டைரியை காவல் ஆய்வாளரிடம் கொடுத்தேன். மேற்படி படிவங்கள் 95 மேற்கண்ட தேதிகளில் என்னிடம் காவல் ஆய்வாளர் கையொப்பம் பெற்றார்.

19. மேற்கண்ட எஸ்.பி.எம். நோட்டு, செங்குந்தர் பொறியில் கல்லூரி 2008 வருடம் உள்ள டைரி மற்றும் ஸ்பைரல் பைடிங் செய்யப்பட்ட எஸ்.ஆர்.எம்.நோட்டு ஆகியவை முறையே அ.சா.பொ.ஆ.3 முதல் அ.சா.பொ.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சான்று பொருட்கள் கைபற்றுதல் சம்மந்தாக காவல் ஆய்வார் வாக்குமூலம் பதிவு செய்தார். இறுதியாக இவ்வழக்கில் என் மகனை காதலித்து பின் ஏமாற்றிய 3வது எதிரியாலும் மற்றும் 1,2 எதிரிகளாலும் என்னுடைய மகனின் பெயர், புகழ் மற்றும் உறவினர்கள் முன்பும் அவ பெயர் ஏற்படுத்தியதால் தான் என் மகன் தற்கொலை செய்து கொண்டார். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**</u>

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்களை அழைத்து அவர்கள் ஆஜர் ஆகவில்லை என்பதால் எனவே குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை என்ற காரணத்தினால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்படுகிறது.